தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆவணி 8, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஆகஸ்ட் 24, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்."

நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சியுடன் வரவேற்றுப் போற்றுகின்றவருடைய வீட்டில் செல்வம் அளிக்கும் திருமகள் மனமகிழ்ச்சியுடன் தங்குவாள்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

101—

அணுகு சாலை

***87—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, மருதம்பள்ளம் மற்றும் பிள்ளைபெருமாநல்லூர் ஊராட்சிகளுக்கிடையில் அம்மனாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு அணுகு சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, மருதம்பள்ளம், பிள்ளைபெருமாநல்லூர் கிராமங்களுக்கிடையே அம்மனாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு அணுகு சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணிவில் தந்தை பெரியாராய், அறிவாற்றலில் பேரறிஞர் அண்ணாவாய், ஈகையில் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவராய், மனித நேயத்தில் அன்னை தெரசாவாய், நாட்டுப் பற்றில் வீரமங்கை வேலுநாச்சியாராய்த் திகழ்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழ் காக்கும் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதம்பள்ளம் மற்றும் பிள்ளைபெருமாநல்லூர் ஊராட்சிகளுக்கிடையில் அம்மனாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம், சுனாமி திட்டத்தின்மூலம் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ரூ.612 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 15-10-2011 அன்று டெண்டர் விடப்பட்டு, ஈரோடு மாவட்டத்தில் உள்ள P.C.& Co., என்ற கம்பெனிக்கு உத்தரவிடப்பட்டு, கட்டப்பட்டுள்ளது. அதுவும் சரிவர பூர்த்தியாகவில்லை. அந்தப் பாலத்திற்குச் செல்லும் சாலையும் அமைக்கப்படவில்லை.

2016 ஆகஸ்ட் 24]

எனவே, அந்தப் பாலத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, மருதம்பள்ளம் மற்றும் பிள்ளைபெருமாநல்லூர் கிராமங்களுக்கிடையே அம்மனாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு இருபுறமும் 750 மீட்டர் நீளமுள்ள அணுகு சாலை அமைக்க, மருதம்பள்ளம், பிள்ளைபெருமாநல்லூர் மற்றும் கலமாநல்லூர் ஆகிய கிராமங்களிலுள்ள நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு தற்போது 15 (1) அறிவிக்கை அரசிதழில் வெளியிடப்பட்டு, நிலத்திற்கான இழப்பீடு நில உரிமையாளர்களுக்கு நில நிருவாக ஆணையத்தின் ஒப்புதலுடன் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அணுகு சாலை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உயர்மட்டப் பாலமாக இருந்தாலும், புறவழிச் சாலைப் பணியாக இருந்தாலும், எந்தவொரு திட்டத்தையும் அறிவிப்பதற்கு முன்பே, அதற்குண்டான இடத்தைக் கையகப்படுத்தி, அதிலேதான் பாலம் அமைப்பதற்கோ, சாலை அமைப்பதற்கோ உத்தரவிட்டிருக்கிறார்கள்.

ஆனால், அந்தப் பாலம் கட்டப்பட்டிருக்கின்ற இடத்தில், இருவழிகளிலும் இருக்கின்ற அணுகு சாலையை, தனியாருக்குச் சொந்தமான சாலையை, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு கையகப்படுத்தாமலேயே, அந்தப் பாலத்தை மட்டும் கட்டிவிட்டுச் சென்றுவிட்டார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 2011-ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், நான் சட்டமன்றப்

பேரவை உறுப்பினராகப் பொறுப்பேற்றவுடன், அங்குள்ள மக்கள் என்னிடத்திலே குறைகளைத் தெரிவித்ததன்பேரில், அந்த இடத்திற்கு நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளையும், வருவாய்த் துறை அதிகாரிகளையும் அழைத்துச் சென்று, அந்தப் பாலத்தைப் பார்க்கின்றபோது, அந்த இடம் கையகப்படுத்தப்படாமலும், தனியாருக்குச் சொந்தமான இடமாகவும் இருக்கின்ற காரணத்தினால், அதுகுறித்து அரசுத் துறை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அந்தச் சாலையைக் கையகப்படுத்துகின்ற வேலை தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்குண்டான நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள், விரைவாக அந்த இடத்தைக் கையகப்படுத்தி சாலை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தற்பொழுது ஏறக்குறைய 15 மீனவக் கிராமங்களிலுள்ள மக்கள் கடற்கரை ஓரமாக 20 கிலோ மீட்டர் சுற்றிச் செல்ல வேண்டியிருப்பதால், குறுக்கு வழியில் விரைவாகச் செல்வதற்கு ஏதுவாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, விரைவாக அந்தச் சாலையை அமைத்துக் கொடுத்து, மக்கள் பயன்பாட்டிற்கு அந்தப் பாலத்தை அமைத்துக் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, அந்தப் பாலம் இன்னமும் முழுமையாகப் பூர்த்தியாகாத நிலையில் இருக்கிறது என்பதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, அந்தப் பாலத்தை விரைவாக முடித்துக் கொடுக்குமாறும் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரைவாக பாலப் பணியையும், அணுகு சாலையையும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இங்கே கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து செயல்பட்டதன் காரணமாகத்தான், இப்பொழுது

2016 ஆகஸ்ட் 24]

நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, நில உரிமையாளருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கியவுடன், அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைத்துப் பிழைப்பவர் வாழ்விற்கு உயர்வினை வழங்கியவர், ஒரு குண்டுமணி அளவு கூட தங்கம் வாங்க வசதி இல்லாத ஏழைகளுக்கு தாலிக்குத் தங்கம் வழங்கி தமிழகத்தின் அன்னையானவர், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆனைமலை ஒன்றியத்தில் ரமணமுதலிபுதூர், காளியாபுரம் ஆகிய இரண்டு கிராமங்களுக்கு இடையில் ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்தால் போக்குவரத்திற்கும், விவசாயப் பணிகள் செய்பவர்களுக்கும், விவசாயிகளுக்கும் மிகவும் வசதியாக இருக்கும். வேட்டைக்காரன்புதூரைச் சுற்றி செல்ல வேண்டியுள்ள காளியாபுரத்திற்கு நேர் வழியாகச் செல்வதற்கு இந்தப் பாலம் மிகவும் வசதியாக இருக்கும். எனவே, அங்கு ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையுள்ள பாலத்தை அறிவித்து, அது கட்டப்பட்டு வருகின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 5 ஆண்டு கால பொற்கால ஆட்சியில் கிட்டத்தட்ட 474 பாலங்கள் அறிவிக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக*

1,132.09 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 319 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, 88 பணிகள் நடைபெற்று வருகின்றன, 47 பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டிருக்கின்றன, ஒப்பந்த நிலையிலே 9 பணிகள் இருக்கின்றன, மதிப்பீட்டு நிலையிலே 5 பணிகள் இருக்கின்றன. இப்பொழுதுகூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப் பேரவையிலே விதி 110-ன்கீழ், இந்த ஆண்டு புதியதாக 80 பாலங்கள் கட்டப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரை, எங்கெங்கெல்லாம் நதியின் குறுக்கே, ஆற்றின் குறுக்கே, ஓடையின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்படுகின்றதோ அதையெல்லாம் ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையிலே பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியிலே ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அந்த ஆய்விலே பாலம் கட்டுகின்ற அவசியம் ஏற்படுகின்றபட்சத்தில், நிதிநிலைக்கேற்ப, வருகின்ற காலத்திலே, அவரது கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரும்பு தோற்கிற சிரிப்பு, கரும்பு தோற்கிற இனிமை, எறும்பு தோற்கிற சுறுசுறுப்பு, இரும்பு தோற்கிற மன உறுதி ஆகியவற்றை ஒருங்கே கொண்டிருக்கிற ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய ஆட்சிக் காலத்தில்தான், மக்கள் நலத் திட்டப் பணிகள் மிகச் சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என தமிழக மக்கள் வாழ்த்தி, வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, என்னுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், கிழக்குக் கடற்கரை சாலைப் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன. அதற்காக இந்த அரசை நான்*

2016 ஆகஸ்ட் 24]

வணங்குகிறேன். என்னுடைய ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட திசையன்விளை-நவ்வலடி சாலையில் இரண்டு இடங்களில் குறுக்கிடுகிற ஆற்றைக் கடப்பதற்கு வசதியாக இரண்டு பாலங்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அப்படி பாலங்கள் உடனடியாக அமைக்கப்படுமா, அதற்கான செயல் திட்டக் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அந்தப் பகுதியிலே ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த ஆய்விலே அப்பகுதியில் பாலம் அமைப்பது அவசியம் என்று கூறப்படும்பட்சத்தில், நிதிநிலைக்கேற்ப, வருகின்ற காலத்திலே அரசு பரிசீலிக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வீ. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்தோர்க்கும், நாளெல்லாம் உழைத்து மெலிந்தோர்க்கும் விடியல் தரவே அவதரித்த வெற்றித் திருமகளே எங்கள் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) வணங்கும் கரங்கள் விலகும் முன்பே வரம் தந்து வாழ்வளிக்கும் எங்கள் தெய்வமே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மயிலாடுதுறை தொகுதி, காட்டுமன்னார்கோவில்-மணல்மேடு பாலம் அமைக்கப்பட்டு விட்டது. மணல்மேட்டிற்குண்டான புறவழிச் சாலை அமைக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு புறவழிச் சாலையை அமைக்க முன்வருமா என தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

[2016 ஆகஸ்ட் 24

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புறவழிச் சாலை வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, குறிப்பிட்ட எண்ணிக்கையில் நகரப் பகுதிகளுக்கும் புறவழிச் சாலைகளை அமைத்துக் கொண்டுதான் வருகின்றது. ஆகவே, எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் புறவழிச் சாலை ஆய்வு செய்யப்பட்டு, அந்த ஆய்விலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றபட்சத்தில், நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பாலசுப்பிரமணி அவர்கள்.*

திரு. ஆர். பாலசுப்பிரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்று வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

வேலூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் மாதனூர் முதல் ஒடுகத்தூர், ஆசனாம்பட்டு வரை நான்குவழிச் சாலை அமைத்துத் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகள் அந்தச் சாலையை ஆய்வு செய்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அச்சாலையை நான்குவழிச் சாலையாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கு நான்குவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அது ஆய்வு செய்யப்படும். ஒவ்வோர் ஆண்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசால் இன்றைக்கு போக்குவரத்து செறிவிற்கேற்ப சாலைகள் அகலப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, இந்தச் சாலையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்கீழ் பராமரிக்கப்படுகின்ற சாலை. அந்தச் சாலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான்குவழிச் சாலையாக அமைக்க வேண்டுமென்று இங்கே குறிப்பிட்டார்கள். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டு, அங்கே போக்குவரத்து செறிவு அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அதை விரிவுபடுத்துவதற்கு அரசு முயற்சிக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.

திரு. ஆர். தங்கதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர், கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

நிலக்கோட்டை-தேனி-கொடைக்கானல் மற்றும் மதுரை-கோயம்புத்தூர்-பழனி போன்ற இடங்கள் சந்திக்கின்ற செம்பட்டி பேருந்து நிலையம் அருகில் சின்ன ரவுண்டானா உள்ளது. அந்த ரவுண்டானாவைக் கடந்து செல்வதற்கு, நான்கு வழிகளிலும் பேருந்துகள் தொடர்ந்து செல்வதால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அங்கு வருடா வருடம் குறைந்தபட்சம் 10 விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்த இடத்தில் ஒரு மேம்பாலம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கேயுள்ள ரவுண்டானாவிலே ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அந்த ஆய்விலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றபட்சத்திலே, நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

102—

துணை மின் நிலையத்தை தரம் உயர்த்துதல்

***1864 திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, சர்த்தபுரம் பேரூராட்சி, செம்பொன்விளையிலுள்ள துணை மின் நிலையத்தை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த துணை மின் நிலையத்தை தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை. ஏனென்று சொன்னால், அங்கு மின் பளு குறைவாக இருக்கின்றது.